13 NOV 2021

சுருக்கம்

வீட்டுவசதி – தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் நிதியைப் பயன்படுத்தி, மதுரை மாவட்டம், தோப்பூர் கிராமத்தில் ரூ.40.82 கோடியில் (நிலத்தின் விலையைத் தவிர்த்து) வணிக வளாகம் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

========== ========== ==========

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீவ3(2)) துறை

அரசாணை (நிலை) எண்.126

நாள். 12.11.2021
பிலவ வருடம், ஐப்பசி 26,
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது:

தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநரின் கடித எண்.பிடபிள்யூ/12032/2021, நாள் 13.10.2021.

=======

ஆணை:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் 2021-2022-ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கை எண்.26-இல் 01.09.2021 அன்று சட்டமன்றத்தில் பின்வரும் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

> "பொதுமக்களின் தேவைக்கு ஏற்ப, மதுரை மாவட்டம், தோப்பூர் கிராமத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ரூ.23.20 கோடியில் செலவில் வணிக வளாகம் ஏற்படுத்தப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்."

2. அதன்படி, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் நிதியைப் பயன்படுத்தி, மதுரை மாவட்டம், தோப்பூர் கிராமத்தில் ரூ.40.82 கோடியில் (நிலத்தின் விலையைத் தவிர்த்து) வணிக வளாகம் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், மேற்காணும் திட்டத்திற்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 20.10.2021 தேதியிட்ட நிகழ்ச்சி நிரல் எண்.4.03.இல் வாரியத்தின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

Verified RealEstate

3. அதன் அடிப்படையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களின் கருத்துருவினை நன்கு ஆராய்ந்து, அதனை ஏற்று, வாரியத்தின் நிதியைப் பயன்படுத்தி, மதுரை மாவட்டம், தோப்பூர் கிராமத்தில் ரூ.40.82 கோடியில் நிலத்தின் விலையைத் தவிர்த்து வணிக வளாகம் கட்டும் திட்டத்திற்கு, ஒப்பந்தப்புள்ளி அழைப்பிற்கு முன் அல்லது நிதி ஒப்பளிக்கும் முன் வாரியத்தின் துணைத் தலைமை குழுமம் (நிதித்துறை உறுப்பினர் உட்பட) விரிவான மதிப்பீட்டைத் தயாரித்து ஆய்வு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிர்வாக ஒப்புதல் அளித்து, ஆணையிடுகிறது.

4. மேற்கண்ட ஆணையின்படி தகுந்த நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன், அத்துறையின் அசாகு. எண்.46127/நிதி(வீவ(ம)நவ)/2021, நாள். 02.11.2021-ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹரிதேஷ் குமார் எஸ். மக்வானா
முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை - 107.
முதன்மை கணக்கு அலுவலர் (A&E), சென்னை - 600 018.
முதன்மை கணக்கு அலுவலர் (G&SSA), சென்னை - 600 018.

நகல்:-

மாண்புமிகு அமைச்சர் (வீ.வ.(ம) ந.வ.) அலுவலகம், சென்னை -09.
கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், நிதித்துறை, சென்னை - 09.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை - 09.
நிதி(வீ.வ.(ம) ந.வ.) துறை, சென்னை - 09.
வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை (அ.ந.மு./வ.செ.)த்துறை, சென்னை - 09.
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

Verified RegiEstate